
# அண்ணாவின் மேடைத்தமிழ்



அ.கி.மூர்த்தி

# அண்ணாவின் மேடைத் தமிழ்

விடுதலைப் பொன்விழா ஆண்டு வெளியீடு

"பாவேந்தர் விழா"
அன்பளிப்பு

தலைவர்
24/3/91

அ.கி. மூர்த்தி

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 1997.
திருவள்ளுவர் ஆண்டு : 2028
உரிமை : ஆசிரியர்க்கு
**விலை ரூ. 7-50**
மணிவாசகர் வெளியீட்டு எண் : 619

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.

8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.

28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம் : 23069 சென்னை : 561039

மதுரை : 622853 கோயமுத்தூர் : 397155

திருச்சி : 706450

ஒளி அச்சு : லட்சுமி லேசர், சென்னை - 600 108.

அச்சிட்டோர் : பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 013.

போன் : 5950958

# பதிப்பாசிரியர்

## டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

# முகவுரை

தமிழவேளும் பதிப்புச் செம்மலுமாகிய முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் வகையறிந்து நல்ல தமிழ்த் தொண்டு செய்துவரும் பெருமகனார். தில்லையில் அண்ணா இலக்கியப் பேரவைத் தலைவராக இருப்பவர். இப் பேரவையின் சார்பில் அண்ணாவின் அருமை பெருமைகளை உலகுக்கு உணர்த்தப் பல சொற் பொழிவுகளை முறையாக ஏற்பாடு செய்து அவை நிகழுமாறும் செய்தார்கள். அவற்றில் ஒன்று தான் **அண்ணாவின் மேடைத்தமிழ்** என்பது. இச்சொற்பொழிவு அவர்கள் தலைமையில் 14-3-93 அன்று தில்லையில் இவ்வாசிரியரால் நிகழ்த்தப்பெற்றது. சொற்பொழிவின் செம்மை கருதித் தமிழவேள் அவர்கள் இதனை விரித்துக் கட்டுரையாக எழுதுமாறு பணித்தார்கள். அதற்கேற்ப இச்சொற்பொழிவு ஏழு கட்டுரைகளாக அண்ணாவின் அருமை மகனார் மருத்துவர் பரிமளம் நடத்திய 'காஞ்சிநாட்'டில் வெளி வந்தது. இப்பொழுது அது ஒன்பது தலைப்புகளில் சற்று விரிவுபடுத்தப்பட்டு வெளிவருகிறது. இக்கட்டுரைகளைத் தம் பத்திரிகையில் வெளியிட்ட மருத்துவர் ப்ரிமளம் அவர்கட்கும், இப்பொழுது நூலாக வெளியிடும் தமிழவேள் அவர்கட்கும், இதற்கு உறுதுணையாக இருந்த மணிவாசகர் நூலக மேலாளர் திரு. இரா. குருமூர்த்தி அவர்கட்கும் பெரிதும் நன்றி உடையேன். இச்சிறு நூலை அண்ணா வாசகர்கள் படித்துப் பெரிதும் பயன்பெறுவார்களாக.



# தமிழ் மறுமலர்ச்சியில் அண்ணாவின் பங்களிப்பு

## பதிப்புச் செம்மல் தமிழவேள் ச. மெய்யப்பன்

சிதம்பரத்தில் அண்ணா இலக்கியப் பேரவை தோற்றுவிக்கப் பெற்றது. அண்ணாவின் இலக்கியப் பணியை மதிப்பீடு செய்வதற்கும் பரப்புவதற்கும் வழிவகை காணப்பட்டது. அண்ணாவின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப் பெறல் வேண்டும் என்ற குரல் ஓங்கி ஒலித்தது. திங்கள் தோறும் அண்ணாவைப் பற்றி அறிஞர் ஒருவர் ஒருதலைப்பில் ஒருமணி நேரம் ஆய்வுப் பொழிவு நிகழ்த்துவார். வரவேற்புரை, தலைமையுரை, முடிவுரை நன்றியுரை எல்லாம் அரைமணி நேரம். குறித்த நேரத்தில் பொழிவினைத் தொடங்கி சரியாக 1½ மணி நேரத்தில் நிகழ்ச்சியை முடிப்பது இந்தப் பன்னிரண்டு பொழிவுகளின் தனிச்சிறப்பு, ஒவ்வொரு பொழிவிற்கும் 125 முதல் 150 பேர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

பொழிஞர்கள், தலைப்பு, பொழிவு நிகழ்ந்த முறை முதலியவற்றைக் கண்ட பெருமக்கள் உளம் உவந்து பாராட்டினர். கடலூர், நெய்வேலி, திருமுதுகுன்றம், சீர்காழி, மயிலாடுதுறை முதலிய இடங்களிலிருந்து மாணவர்களும், ஆய்வாளர்களும் ஆசிரியர்களும் தவறாது வந்து கேட்டுப் பயன்பெற்றனர். தொடர் பொழிவுகள் தொய்வின்றி ஓராண்டு முழுதும் நடந்தது. ஆண்டு முழுதும் அண்ணா அலை வீசியது. அலைகள் ஓய்வதில்லை என்பதற்கேற்ப அப்பொழிவுகள் நூல் வடிவம் பெறுகின்றன. இப்பொழுது அண்ணாவின் மேடைத்தமிழ் மலர்கிறது. மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று நூல் உருவில் தென்றலாய் உலாவுகிறது.

பன்னிரண்டு பொழிவுகளும் அண்ணாவின் பன்முக ஆற்றல்களை வெளிக்கொணர்ந்தன. பொழிஞர்கள் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் தாம் எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்ப வகைப்படுத்திச் சிறந்த முறையில் சொற்பொழிவு நிகழ்த்தினர் என்பதற்கு இந்நூலே சான்று. அண்ணாவின் அறிவாற்றல், சிந்தனை ஆற்றல், எழுத்தாற்றல், பேச்சாற்றல், தமிழ் ஆற்றல், முதலிய பல்வகைத் திறன்களை ஒருங்கிணைந்த மாலையாய் அமைந்தது பொழிவுகள். தமிழ் மறுமலர்ச்சியில் அண்ணாவின் பங்களிப்பும் தமிழ் மேடைகளில் அண்ணாவின் சாதனையும் தமிழ் உரைநடையில் அண்ணா செய்த மாற்றங்களும் தமிழ்ச் சிந்தனைப் பேச்சில் அண்ணா ஏற்படுத்திய தாக்கமும், அண்ணா பதித்த சுவடுகளும் சீரோடும் சிறப்போடும் வலிவோடும் பொலிவோடும் பொழிவுகளில் விரிக்கப்பெற்றன. நாவாலும் பேனாவாலும் அண்ணா பதித்த முத்திரைகள் இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் தனிச்சிறப்பிடம் பெற்றுவிட்டன.

இந்நூலாசிரியர் அ.கி. மூர்த்தி, தமிழுக்குச் செழுமை சேர்க்கும் தமிழ்ப்பல்கலைக்கழகம் தழைத்துவரும் தஞ்சையில் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றியவர். சிந்தனையாலும், செயலாலும் பள்ளிக்குப் பல சிறப்புகள் சேர்த்தவர். மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பள்ளியை முதன்மை பெறச் செய்த நல்லாசிரியர். உழைப்புக்கு அஞ்சாத இந்த உத்தமர் உருவாக்கிய நூல்கள் பல. இவர் தொகுத்த **அறிவியல் அகராதி** அறிவியல் தமிழ் வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெற்று விட்டது. அறிவியல் அறிஞர்களும், தமிழ் அறிஞர்களும் ஒரு சேரப் போற்றிப் பாராட்டும் சிறப்புப் பெற்றுள்ளது. வணிகவியல் அகராதியும் இவரின் இன்னொரு நூலாகும். பெருந்திட்டங்களைக் கொண்டு, பேருழைப்பில் பெரு முயற்சிகளில் ஈடுபட்டுப் பெருஞ்சாதனை படைத்துப் பேருவகை கொள்வது இவர் இயல்பு என்பதற்கு இவர் பல்லாண்டுகள் பாடுபட்டு உருவாக்கிய வெற்றி 'மெகா' அகராதி (1500 பக்கங்களைக் கொண்டது) சரியானதொரு சான்றாக அமைகிறது.

அண்ணாவின் பேச்சுக்களை, கட்டுரைகளை தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்புச் செய்தவர். மொழியாக்கம் செய்வதிலும், தமிழாக்கம் செய்வதிலும் இவர் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவர். இந்நூலில் அண்ணாவின் சொற்பொழிவுகளைப் பகுத்தும் வகுத்தும் நுண்ணாய்வு செய்துள்ளார். அண்ணாவின் மேடைத்தமிழ் பற்றி இது போன்ற ஆய்வுநூல் வந்ததில்லை. காலமுறைப்படி வகுத்துக்காட்டி பேச்சின் சிறப்புக் கூறுகளைக் கோடிட்டுக் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது. இன்றையப் பேச்சாளர்களுக்கும், இனிவரும் பேச்சாளர்களுக்கும் இவ்வகை நூல்களே பல்வகைப் பயன்தர வல்லன. நல்ல பேச்சையும் நல்ல நூலையும் நல்கிய நல்லாசிரியருக்கு நம் வாழ்த்துக்கள்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 9 |
| 2. | வகைப்பாடு | 14 |
| 3. | துறை வகை | 17 |
| 4. | அரிய இயல்புகள் | 22 |
| 5. | நடை | 28 |
| 6. | மேடைப் பேச்சு மொழிகளும் கருத்துகளும் | 34 |
| 7. | தரணிபோற்றும் உரை | 37 |
| 8. | ஆய்வாளர்கள் | 42 |
| 9. | வெளியீடுகள் | 44 |

# அண்ணாவின் மேடைத் தமிழ்

## 1. அறிமுகம்

அண்ணாவின் பேச்சுத் தமிழ் அரும் பெரும் மேடைத்தமிழ் ஆகும். அதனைப் பின்வருமாறு அறிமுகம் செய்யலாம்,

இலக்கணம் : அண்ணா வளர்த்த தமிழ்த் துறைகள் பல. கதை, கவிதை, கடிதம், கட்டுரை, நாடகம் இதழியல் எனப் பலவாகும் அவை. அவற்றில் ஒன்றுதான் மேடைத்தமிழ். பேச்சை முதலாகவும் கருவாகவும் கொண்ட தமிழே மேடைத் தமிழ்.

கால எல்லை : அண்ணா மேடைத் தமிழின் கால எல்லை என்ன? 40 ஆண்டுகள் எனலாம். அண்ணா தம் கல்லூரி வாழ்வைத் தொடங்கிய காலம் 1930, நம்மை விட்டுப் பிரிந்த காலம் 1969. ஆக, 1930 – 69 வரையுள்ள 40 ஆண்டுக் காலமே அண்ணா மேடைத் தமிழ்க் காலம்,

காலப் பிரிவுகள் : இக்கால் எல்லையை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்,

1) 1930–35 : அண்ணாவின் கல்லூரி வாழ்விற்குரிய காலம். இக்காலத்தில் கல்லூரி இலக்கிய மன்றத்தில் பேசிய பேச்சுகளும் வெளியே பொதுமேடையில் பேசிய பேச்சுகளும் அடங்கும். இவை எல்லாம் குறிப்பிட்ட பொருளில் பேசப்பட்டவை. ஆகவே, இவற்றைப் பொருள் வழிப் பேச்சுகள் எனலாம்.

கல்லூரி நாட்களில் சொற்போர் நடக்கும் பொழுது, அண்ணாவை யாராலும் வெல்ல முடியாது என்று அவர்தம் ஆங்கிலப் பேராசிரியர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றார். இக்காலப் பேச்சுகளில் அண்ணாவின் கருத்துத் துடிப்பை நாம் காணலாம்.

2) 1936–48 : அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தில் இருந்த காலம். தந்தை பெரியார் அவர்களின் தளபதியாகவும் போர்வாளாகவும் இருந்து, பகுத்தறிவு அடிப்படையில் சீர்திருத்தப் பேச்சுகள் பேசிய காலம், ஏனெனில், அப்பொழுது பெரிதாகக் கருதப்பட்டது சமூகச் சீர்திருத்தமே. இக்காலப் பேச்சுகளில் அண்ணாவின் கருத்து வீச்சைக் கொள்கை விளக்கமாக நாம் காணலாம்.

3) 1949 – 66 : அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்ற ககழகத்தைத் தொடங்கி, அதன் செயலாளராகவும் வழி நடத்துபவராகவும் இருந்த காலம். இக்காலப் பேச்சுகளில் அரசியலுக்கு முதலிடமும் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு இரண்டாமிடமும் அண்ணா அவர்கள் அளித்தார்கள். அரசியல் வழி ஆட்சிப் பீடம் ஏறினால்தான், தாம் நிறைவேற்ற விரும்பும் சமூகச் சீர்திருத்தங்களுக்குச் சட்ட வடிவம் கொடுக்க இயலும் என்று அண்ணா அவர்கள் கருதினார்கள்.

20 ஆண்டுகாலத் தீவிரப் பிரச்சாரத்தால், அதனை அவர்கள் சாதித்தும் காட்டினார்கள். 1967இல் அண்ணா அரசு அமைத்ததை நாம் நன்கறிவோம். இக்காலப் பேச்சுகள் அண்ணாவின் கருத்துப் பொலிவைக் காட்டுபவை.

4) 1967 – 1969 : அண்ணா அவர்கள் 6–3–67இல் தமிழக முதலமைச்சரானார். 3–2–69இல் தம் இன்னுயிர் நீத்தார். இக்கால எல்லை 22 மாதங்கள் 8 நாட்கள். (1967

இல் 9 மாதம் 26 நாட்கள்; 1968 இல் 12 மாதங்கள்; 1969இல் 1 மாதம் 2 நாள்). இக்காலத்தில் இவர் பேசிய பேச்சுகள் மிகச் சிறந்தவை; எண்ணிக்கையிலும் மிகுந்தவை. ஆட்சிப் பொறுப்பு நிலையில் ஆற்றப்பட்டவை. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைவரும் ஒப்பக் கூடிய உலகளாவிய கருத்துகளை அண்ணா அவர்கள் பேசிய காலம் இது. இக்காலப் பேச்சுகளில் அவர்தம் கருத்து முதிர்ச்சியே முதன்மையாக உள்ளது.

எத்தனை பேச்சுகள்? : அண்ணா அவர்களின் கல்லூரிக் காலத்தை விட்டுவிட்டு, 1936 – 1969 வரை பார்ப்போமானால், ஓர் ஆண்டுக்குக் குறைந்தது 30 பேச்சுகள் என்று கொண்டாலும் அவர் 35 ஆண்டுகளில் பேசிய பேச்சுகள் 1050. இது ஒரு தோராயக் கணக்கே. நடைமுறைக்கு 1000 என்று வைத்துக் கொள்ளலாம்.

முதல் பேச்சு எது : இவற்றில் முதல் பேச்சு எது? சொல்வது கடினம். கிடைப்பதும் கடினம். இருப்பினும் 1930 – 35 வரை அவர் கல்லூரியிலும் வெளியிலும் பேசிய பேச்சுகளில்தான் இந்த முதல்பேச்சு இருக்க வேண்டும். இது பற்றி இரு கருத்துகள் கூறப்படுகின்றன.

கல்லூரியில் பேசியது முதல் பேச்சு என்றும் திருப்பூர்ப் பொதுக்கூட்டத்தில் பேசியது முதல் பேச்சு என்றும் கூறுபவர் உளர்.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த கூட்டமொன்றில் அண்ணா பேச அழைக்கப்பட்டார். டாக்டர் தருமாம்பாள் அண்ணாவைப் பேச அழைக்குமாறு கேட்டுக் கொண்டார். கூட்டத்தின் அமைப்பு வேலைகளைக் கவனித்து வந்த பக்கிரிசாமி

என்பார் அண்ணாவையும் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட பேச்சாளர் வரிசையில் சேர்த்துக் கொண்டார். இக்கூட்டத்தில் அண்ணா ஆற்றிய சொற்பொழிவே, முதல் சொற்பொழிவு என்பது டாக்டர் சிற்சபை கருத்து.

அண்ணாவின் நம்பத்தகுந்த தம்பிகளில் ஒருவராகிய மாண்புமிகு திரு எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் திருப்பூர்ப் பொதுக் கூட்டத்தில் பேசியதே முதல் பேச்சு என்று கூறுவார்.

(பேரறிஞர் அண்ணாவின் மேடைக்கலை, டாக்டர் பொன். செல்வகணபதி, மாநிலக் கல்லூரி, சென்னை, காஞ்சி நாடு 7–8–92.)

கடைசிப் பேச்சு எது? : இதற்கு நமக்குச் சான்று உள்ளது. 14–1–69 அன்று சென்னையில் தியாகராய நகரில் கலைவாணர் சிலையைத் திறந்து வைத்துப் பேசியதே அண்ணாவின் இறுதிப் பேச்சு. தம் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் அண்ணா கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி இதுவே.

வெளியான பேச்சுகள் : இதுவரை தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் வெளிவந்த பேச்சுகள் 300 இருக்கலாம். இவற்றில் 13 நாடாளுமன்ற உரைகள்; 128 சட்டமன்ற உரைகள், பட்டமளிப்பு விழா உரைகள் முதலியவை. இவை ஆங்கிலத்தில் வந்தவை. எஞ்சிய 159 தமிழ்ப் பேச்சுகளே.

வெளியாக வேண்டியவை : இவை 700 இருக்கலாம். இவை எல்லாவற்றையும் திரட்டுவது முயற்கொம்பே. இருப்பினும், முயன்றால் குறைந்தது 200 பேச்சுகளுக்கு மேல் திரட்டலாம். இதற்கு விடுதலை, குடியரசு முதலிய இதழ்களை நாம் துருவிப் பார்க்க வேண்டும். மாலை மணி, நம் நாடு,

முரசொலி முதலியவற்றையும் அலசிப் பார்க்கலாம். அண்ணா ஆர்வலர்களுக்குத் தனி வேண்டுகோள் விடுத்துப் பெறலாம். இது சீரிய முயற்சி.

அளவு : அண்ணா பேச்சுகளில் கால அளவின் பேரெல்லை 1 மணி. சிற்றெல்லை 15 நிமிடம். குறிப்பிட்ட தலைப்புகளில் தொடக்கக் காலத்தில் பேசிய பேச்சுகள் எல்லாம் 1 மணி நேர அளவு கொண்டவை. (எ.டு.) நாம், தீ பரவட்டும், ஏ தாழ்ந்த தமிழகமே. திருமணம், பாராட்டு, இரங்கல் தெரிவித்தல் முதலிய நிகழ்ச்சிகளில் பேசியவை 15 நிமிட எல்லை உடையவை. முன்னவை நீண்ட பேச்சுகள். பின்னவை குறுகிய பேச்சுகள்.

எத்தமிழ் சிறந்தது : தமிழின் பல துறைகளையும் அண்ணா வளர்த்துள்ளார்கள். அவர் தொட்டதுறை ஒவ்வொன்றும் துலங்கிற்று. இவற்றில் சிறந்தது எது என ஒரு வினா எழலாம். ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையில் சிறந்ததே எனினும் பொது மக்களிடத்தில் ஒரு பெரிய விழிப்பையும் தாக்கத்தையும் உண்டாக்கியது மேடைத் தமிழே. இவ்வகையில் அத்தமிழே அண்ணாவின் ஏனைய தமிழ் வகைகளில் சிறந்தது எனக் கொள்ளலாம்.

# 2. வகைப்பாடு

அறிவியலிலும் ஆராய்ச்சியிலும் வகைப்பாடு என்பது மிக இன்றியமையாதது. அறிய வேண்டிய செய்திகளை அல்லது உண்மைகளைப் பாகுபாடு செய்து தெளிவாக அறிய அது வழிவகுக்கிற. அண்ணாவின் பேச்சுகள் அனைத்தையும் காலவகையில் மூன்றாகவும் தலைப்பு வகையில் எட்டாகவும் துறை வகையில் பதினான்காகவும் பிரிக்கலாம். இங்குக் கால வகைபற்றியும் தலைப்பு வகைபற்றியும் காண்போம்.

## கால வகை

1. தொடக்கக் காலப் பேச்சுகள் : இவை கல்லூரிக்காலம் முதல் திராவிடர் கழகத்தில் இருந்த காலம் வரை அண்ணா ஆற்றிய பேச்சுகள். இவை பிரச்சாரப் பேச்சுகளே.

2. இடைக்காலப் பேச்சுகள் : இவை தி.மு.க ஆட்சியைப் பிடிப்பதற்கு முன் பேசப்பட்ட பேச்சுகள். இவற்றை அரசியல் பேச்சுகள் எனலாம்.

3. பிற்காலப் பேச்சுகள் : இவை அண்ணா ஆட்சியை அமைத்தபின் பேசியவை. ஏனைய இரண்டு காலங்களோடும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் பொழுது, குறுகிய காலமான இரண்டே ஆண்டில் பேசிய பேச்சுகளே அதிகம். இவை ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுது அரசு சார்பாகப் பேசியவை.

## தலைப்பு வகை

1. பட்டமளிப்பு விழா உரைகள்: இவை மூன்றே. சென்னைச் சமூகப் பள்ளியின் பட்டமளிப்பு விழா உரை. இரண்டாவது, மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரை. இவை இரண்டும் தமிழில் ஆற்றப் பெற்றவை. மூன்றாம் உரையான அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா உரை ஆங்கிலத்தில் ஆற்றப்பட்டது. இவை இரண்டும் பேச்சுக்கலைப் பேரிலக்கியங்கள் காலம் ***1967*** (பா. அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், Convocation Address of Anna, அண்ணா வெளியீட்டில்லம், தஞ்சாவூர் – 9).

2. வானொலி உரைகள் : இவை ஆறு. ஆங்கிலம் இரண்டு; தமிழ் நான்கு. சீன வலுத்தாக்குதலின் பொழுது ஆற்றிய சீரிய உரையும் இதில் சேர்ந்ததே. இவையும் சிறந்த கருத்துக் கருவுலங்கள் காலம் ***1948, 1967, 1968.*** (பா. Radio Talks of Anna, Anna Publishing House, Thanjavur - 9)

3. சட்டமன்ற உரைகள் : இவை ***40***க்குக் குறையாம லிருக்கலாம். அண்ணா எதிர்க்கட்சித் தலைவராகவும் முதலமைச்சராகவும் இருந்த காலை ஆற்றப்பட்டவை. காலம் ***1957–61*** எதிர்க்கட்சி. ***1967–69*** ஆளுங்கட்சி முதல்வர். இவை சட்ட மன்றப் பேச்சுப் பேரிலக்கியங்கள். தமிழில் சென்னை பாபு பதிப்பகத்தார் வெளியீட்டுள்ளனர். (பா. Assembly Speechs of Anna, Anna Publishing House, Thanjavur - 9)

4. நாடாளுமன்ற உரைகள் : இவை பதின்மூன்றும் ஆங்கிலத்தில் ஆற்றப்பெற்றவை. கலைஞர் அரசால் அப்பொழுது அமைச்சராக இருந்த பண்ருட்டியார் தொகுத்து,

ஓரியன்ட் லாங்கமன் பதிப்பகத்தார் மூலம் வெளியிட்டது. காலம் 1962 – 66. முதல் முதலாக இவை அண்ணாவின் நாவன்மையை வடபுலத்தாருக்கும் உலகிற்கும் வெளிப் படுத்தியவை. (பா. Anna Speaks, Orient Longman, Madras - 2).

5. பாராட்டுரைகள் : இவை இருபதிற்கு மேற்பட்டவை. இவற்றில் 23 மட்டுமே ஆங்கில மொழியாக்கமாக வெளியிடப் பட்டுள்ளன. ஒன்று ஆசிரியர்களைப் பற்றியது. ஏனையவை 22 அறிஞர் பெருமக்களைப் பாராட்டும் சிறந்த உரைகள். காலம் 1967 – 69. (பா. Felicitation Addresses of Anna, APH, Thanjavur - 9)

6. துவக்க உரைகள் : இவையும் 20க்குமேல் இருக்கலாம். இவற்றில் 20 ஆங்கில மொழியாக்கமாக வெளியிடப் பட்டுள்ளன. காலம் 1967–68. இவை அண்ணாவின் அறிவாழத்தைக் காட்டுபவை.

7. தலைமை உரைகள் : இவை 50க்கு மேல் இருக்கும். ஆங்கில மொழியாக்கமாக 11 உரைகள் வெளியிடப் பட்டுள்ளன. தலைமை உரைகள் 28. காலம் 1954, 1967 – 68. இவை முத்தான பேச்சுகள். (பா. Inaugural and Presidential Addresses of Anna, அண்ணாவின் தலைமை உரைகள், APH, Thanjavur - 9)

8. பொது உரைகள் : இவை 100க்கு மேற்பட்டவை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேசப்பட்டவை. பல நிலைகளில் பலருக்கும் பேசிய பேச்சுகள். இவையே அதிகம். பலர் பல தலைப்புகளில் வெளியிட்டுள்ளனர். இவற்றில் 51 பேச்சுகள் ஆங்கில மொழியாக்கமாக வெளி வந்துள்ளன.

இவை அண்ணாவின் அறிவுக் கருவூலங்கள் காலம் 1936–1969. (பா. Occasional Speeches of Anna, APH, Thanjavur-9.)

# 3. துறை வகை

பொருள் அல்லது துறை நிலையில் அண்ணா பேசிய பேச்சுக்களைப் பதினான்கில் அடக்கலாம். ஒவ்வொரு தலைப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை ஆங்கில மொழியாக்கப் பேச்சுகளின் எண்ணிக்கையாகும். காலம் *1967–69.*

1) ஆட்சி : 5 பேச்சுகள். "ஒரு சில மண்டபங்களில் நடத்தப்படுவது அரசன்று. ஒரு தனியாளிடம் காணப்படும் பண்பும் ஒழுக்கமும் இறுதியாக ஒரு நாட்டின் அரசில் பிரதிபலிக்கின்றன. இதைத் தந்தை பெரியார் அவர்களும் ஆழமாக வற்புறுத்தினார். யோக்கியன் என்று இவர்கள் தம் மொழியில் கூறுவார்கள்."

2) வேளாண்மை : 5 பேச்சுகள். "ஒரு வலுவான வேளாண் பொருளாதாரத்தின் அடிப்படையில் அமைந்த தொழில்களே உண்மையான வலுக் கொண்டதாகும். வேளாண்மையும் ஒரு தொழில் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

3. வாழ்க்கை வரலாறு : 21 உரைகள். பேசப்பட்ட பெருமக்கள்: 1) அம்பேத்கார் 2) காமராசர் 3) முத்தையா செட்டியார் 4) வேங்கடராமன் 5) இராமசாமி ஐயர் 6) அப்பாதுரை 7) பக்தவச்சலம் 8) பெரியார் 9) ஜி. டி. நாயுடு 10) கலைஞர் 11) ஆச்சாரியா துறவி 12) மு. வ 13) செங்கல்வராயன் 14) ஆர்க்காட்டு இரட்டையர் 15) இராஜாஜி 16) சந்திரகாந்தா 17) சிவாஜி கணேசன் 18) டி. கே. சண்முகம் 19) எம். ஜி. ஆர். 20) என். எஸ். கே

21) காந்தி. ஒவ்வொருவரின் போற்றுதற்குரிய பண்புகளை நறுக்குத் தறித்தாற்போல அண்ணா அவர்கள், வானளாவப் புகழ்கின்றனர். ஒரு சிறந்த தன் வரலாற்றாசிரியராக அண்ணா இப்பேச்சுகளில் திகழ்கின்றார்.

4) மக்களாட்சி : 7 உரைகள். அண்ணா சிறந்த ஜனநாயகவாதி. அவர் குறிப்பிடுபவை: "நல்ல செயல்கள் நடைபெற, ஜனநாயகத்தில் நல்ல வழிகாட்டுதலும் நல்லுரையும் தேவை. ஜனநாயகமே பாதுகாப்பானது. மனிதாபிமானமுள்ளது. மக்களால் என்றும் ஜனநாயகத்திற்கு ஆபத்தில்லை. அது ஏற்பட வேண்டு மென்றால் அரசியல் தலைவர்களாலேயே ஏற்படவேண்டும். இன்றைய இந்திய அரசியல் நிலை மாநில அரசியல் உட்பட இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு."

5) பொருளாதாரம் : 8 உரைகள். அண்ணா பொருளியல் படித்தவர். "பொது மக்கள் தாங்கள் அன்றாடம் வாங்கும் பொருள்கள் அவர்கள் வாங்கும் திறனுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்; அப்பொழுதுதான் ஏனைய பொருள்கள் பொருளியல் சமநிலையில் இருக்கும்." என்பதே அண்ணாவின் பொருளியல் கொள்கை. இதை அடிப்படையாகக் கொண்டே படியரிசித் திட்டத்தை அண்ணா தம் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் நகரங்களான கோவை, சென்னை ஆகிய இரண்டிலும் அறிமுகப் படுத்தினார். இதைப் பொருளியல் மேதை டாக்டர் உலோகநாதன் அப்பொழுது புகழ்ந்து பேசினார்.

6) கல்வி : 11 உரைகள். "ஒரு நாட்டின் நிலையான செல்வம் கல்வியே 'பெண் கல்வி மிக இன்றியமையாதது. மாணவர்கள் தங்கள் வாழ்வில் சிறந்த சமூகத் தொண்டாற்ற வேண்டும். பணிநோக்கத்தை விடப் பண்பு நோக்கம், அறிவு

நோக்கம் ஆகிய இரண்டுமே முக்கியம்'' அண்ணா அதிகம் வலியுறுத்துகின்றார். ஒரு சமுதாயத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஆசிரியர்கள் கையில்தான் இருக்கிறது. பல்கலைக் கழகங்கள் பாமரனையும் கணக்கில் கொள்ள வேண்டும். ஏனெனில், இது பாமரனின் காலம்.'' என்பது அண்ணாவின் கொள்கை.

7) வரலாறு : 12 உரைகள். தமிழக உண்மை வரலாறு தவறாது எழுதப்பட வேண்டும். அண்ணா கூற்றுப்படி, **தமிழ்நாடு என்னும் பெயர்மாற்றம், இந்தி ஒழிப்பு, சுயமரியாதைத் திருமணச் சட்டம் நிறைவேற்றல்** ஆகிய மூன்றும் மிகச் சிறந்த வரலாற்று நிகழ்ச்சிகள். ஒரு நாட்டில் முதலுடைமையா ஒப்புடைமையா என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதன்று. தன் நாடு உயரவேண்டும் என்னும் உறுதிப்பாட்டுடன் ஒவ்வொரு குடிமகனும் செயற்பட வேண்டும். இதற்கு ஜப்பான் சிறந்த எடுத்துக்காட்டு.

8) தொழில்துறை : 6 உரைகள். வணிகர், தொழிலாளர், தொழிலதிபர் ஆகிய மூவரின் ஒத்துழைப்பினாலேயே தொழில்துறை சிறப்புறும். கல்வி, தொழில்துறை, பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளில் ஏற்படும் வளர்ச்சியே ஒரு நாட்டினை உயர்த்த வல்லது.

9) மொழியும் இலக்கியமும் : 9 உரைகள். தமிழின் அருமைபெருமைகளை அண்ணா வானளாவப் புகழ்கின்றார். இன்று பெரிதாக வலியுறுத்தப்படும் ஒற்றுமை, ஒருலகக் கருத்து ஆகியவை 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களால் வலியுறுத்தப்பட்ட பழைய செய்திகள். ('யாதும் ஊரே, யாவரும் கேளிர்'). ''கனிவு, தெளிவு, துணிவு ஆகியவை தமிழறிஞர்களுக்குத் தேவை. காலத்துக்கேற்ற கருத்துகளை மக்களுக்கு இவர்கள் இனங்காட்ட வேண்டும்.''

10) சட்டம் : 8 உரைகள். ''நீதியே நிலையானது; தீர்ப்பன்று. பொதுவாக, நாட்டின் ஒவ்வொரு சிக்கலையும் அலசி ஆராய்ந்து அதற்குரிய தீர்வை வழக்கறிஞர்கள் வழங்கலாம். நீதித் துறையும் ஆட்சித் துறையும் தனிப்பட்ட துறைகள் என்பதைத் தம் அரசு உறுதியாகப் பின்பற்றும்'' என அண்ணா வலியுறுத்துகின்றார்.

11) அறிவியலும் மருத்துவம் : 2 உரைகள். சித்தமருத் துவத்தை அண்ணா பெரிதும் போற்றுகின்றார். மருத்துவர்கள் கனிவோடும் சமூகத் தெளிவோடும் தம் பணியைச் செய்ய வேண்டும் என்பது அண்ணா அவர்கள் கருத்து.

12) அரசியல் : 14 உரைகள். அண்ணா அரசியல்வாதி என்பதைவிட அரசியல் அறிஞர் என்பதே சாலப் பொருத்த முடையது. தம் வாழ்நாள் முழுதும் மக்கள் நலனையே பெரிதாக எண்ணியவர். தொழிலாளர்களுக்காக மே நாள் விடுமுறை வழங்கியவர். ஓர் ஆணை பிறப்பித்துத் திரு, திருமதியை வழக்கத்திற்கு கொண்டு வந்தவர். மொழிக் கொள்கையைப் பொறுத்தவரை தமிழ் ஆட்சி மொழி; ஆங்கிலம் இணைப்பு மொழி என்பது அவர்தம் உறுதியான கொள்கை. மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதையும் வற்புறுத்துகிறார். அரசியல்வாதி மட்டுமே ஒரு நாட்டை உயர்த்திவிட முடியாது; கலந்துரையாடல் மூலமே ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும். இதுவே நிலையான தீர்வாக அமையும். இக்கருத்து இன்றைய அரசியல் நிலைக்கு மிகப் பொருந்துவதாகும்.

13) சமயம் : 4 உரைகள். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன். மனிதன் இறைவனுக்கு மட்டுமே அடிமை. சமயம்

மனிதனை நல்வழிப்படுத்த வேண்டும். சமுதாய நோக்கோடு செயற்பட வேண்டும்'' என வற்புறுத்துகிறார்.

14) சமூகத்தொண்டு : 5 உரைகள். சிறந்த சமுதாயத் தொண்டர் அண்ணா. அவர்தம் கருத்துப்படி சமுதாயச் சீர்திருத்தம், வேறு சமூக சேவை வேறு. முன்னது எதிர்ப்புக்குரியது. பின்னது அப்படியன்று. சமூகத் தொண்டு கட்சிக்கு அப்பாற்பட்டது. இதற்காகவே அண்ணா சீரணியை உருவாக்கினார். பல நல்ல தொண்டுகளையும் மாவட்டம் தோறும் அதன் மூலம் செய்தார். மது விலக்கு, தீண்டாமை, சாதி ஒழிப்பு ஆகியவற்றைத் தேசியப் பிரச்சினைகளாக எடுத்துக்கொண்டு தீர்வு காண வேண்டும் எனப் பல நல்ல கருத்துகளை அண்ணா கூறுகின்றார்.

(பா. A Critical Introduction to six volumes, Occasional Speeches of Anna, P P XIII -XXVI, edited by A.K Moorthy, APH, Thanjavur 9. Now F2, Srivari Apartments, 42, Krishnapuram St., Choolaimedu High Road, Chennai - 94.)

# 4. அரிய இயல்புகள்

விழுமிய பேச்சின் எல்லா வியத்தகு பண்புகளையும் அண்ணாவின் உரைகள் பெற்றுள்ளன. ஒரு சில பண்புகளை மட்டும் ஒவ்வொன்றாக இங்குக் காண்போம். அதற்கு முன் அண்ணா பேச்சின் இலக்கணம், அதன் நோக்கம் ஆகிய இரண்டையும் பற்றி ஒரு சிறிது பார்ப்போம்.

இலக்கணம் : சொல், பொழிவு, பேச்சு, உரை என்பன பேச்சுக் கலையில் பயன்படும் ஒரு பொருள் பன்மொழிச் சொற்கள். பின், பேச்சுக்கு இலக்கணந்தான் என்ன?

எளிதாகக் கூற வேண்டுமானால், முறையான பொழிவே பேச்சாகும். வள்ளுவர் மொழியில், நிரந்தினது சொல்லுதலாகும். அதாவது, பல நயங்களுடனும் நலங்களுடனும் கூற வேண்டிய பொருளை வரிசைப்படுத்தி, கேட்போர் உளங்கொள்ளும் வகையில் இனிமையாகக் கூறுவதாகும்.

> விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

குறள் கூறும் இவ்விலக்கணத்தை அண்ணாவின் பேச்சுகள் முதன்மையாகக் கொண்டுள்ளன. இவ்வாறு பேசுவது அண்ணாவிற்குக் கைவந்த கலை.

நோக்கம் : வீழ்ச்சியுற்ற தமிழகம் மீண்டும் எல்லாத் துறைகளிலும் எழுச்சி பெற வேண்டும் என்பதே அண்ணா பேச்சுகளின் தலையாய நோக்கமாகும். பொது மக்களை விழிப்படையச் செய்யும் ஒரு சிறந்த கருவியாகவே, பேச்சுக் கலையை அண்ணா கருதினார். அவ்வகையில் அது முழுக்க

முழுக்கப் பிரச்சார நோக்கமுள்ளது என்பதை அண்ணாவை ஆராய்பவர்கள் ஒரு பொழுதும் மறத்தலாகாது. இந்தப் பண்பை அவர்தம் பேச்சுகளிலிருந்தும் எழுத்துகளிலிருந்தும் நாம் பிரிக்கவும் இயலாது.

1) கையாளல் : தான் பேச எடுத்துக்கொண்ட பொருள் எதுவாயினும், அதைப்பற்றிய ஒரு தெளிவான அறிவை அவையோருக்கு அளிப்பது அண்ணாவிற்குரிய தனி இயல்பு. அண்ணா பேச்சைக் கேட்கும் எவரும், தேனில் மொய்த்த ஈ போன்று திளைத்திருப்பர். தான் பேசும் பொருளை அண்ணா கையாளும் அறிவார்ந்த நிலையே இதற்குக் காரணம். மேலும், பல்துறை அறிவையும் பல நயங்களுடன் கதை சொல்வது போல் ஆற்றொழுக்காகத் தம் பேச்சின் மூலம் அண்ணா அளிப்பார்.

2) நிகழ்த்தும் பாங்கு : அண்ணா பேசும் முறையே தனி பாணியினைக் கொண்டது. இவர்தம் பேச்சில் தொடக்கம், மையம், முடிவு என்னும் மூன்று பகுதிகள் தவறாமல் இருக்கும்.

தொடக்கத்தை ஒரு குறிப்போடு தொடங்குவார். குறிப்பு பாராட்டு, வருத்தம், அறிவிப்பு, மேற்கோள் முதலியவற்றோடு தொடங்கும். எ.டு. “இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களை எல்லாம் பாராட்டி விட்டுப் போகலாம் என்பதற்காக மட்டும் நான் வரவில்லை. இச்சமூகப் பணிப் பள்ளியின் அமைப்பாளர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துச் செல்லவும் வந்திருக்கிறேன். கிளப் வாலா ஜாதவ் அம்மையாரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த நிறுவனம் சீரிய முறையில் செயற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. (பா. எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப் பணி, பட்டமளிப்பு விழா உரை பக் 1)

மையம் என்பது பேச்சின் வளர்ச்சிப் பகுதியாகும். படிப்படியாக ஒரே சீராக அது வளரும். இதில் உயர்ந்த கருத்துகள், அசைக்க முடியாத மேற்கோள்கள், நாட்டுச் சிக்கல்களுக்குரிய நல்ல தீர்வுகள் முதலியவை அடங்கும்.

(எ.டு.) "நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் பொறுப்பு இளைய தலை முறையினருக்கு உண்டு. சமுதாயப் பணிகளிலும் தொண்டுகளிலும் இளைஞர்கள் காட்டும் அக்கறையும் மேற்கொள்ளும் பொறுப்புகளும் நாட்டின் வாழ்வை மலரச் செய்யும்.

சமுதாயச் சீர்திருத்தம் வேறு, சமூகச் சேவை வேறு. சமுதாயச் சீர்திருத்தம் சில எதிர்ப்புகளைத் தேடித்தரும். ஆனால், சமூக சேவை அப்படிப்பட்டதல்ல.

நம் நாட்டு மீது விடுக்கப்பட்டிருக்கும் அறைகூவலை எதிர்த்துப் பணியாற்றுவதில் இளைஞர்களுக்கு முக்கிய இடமுண்டு.

நம்முடைய நாடு பிற்பட்ட நாடல்ல. தனிப்பட்ட வீறுடைய நாடாக விளங்குகிறது. தத்துவத்தில் சிறந்த நாடாக உயர்ந்து இருந்தாலுங்கூட இங்குக் கல்லாமையும் அதிகமாக இருக்கிறது.

மருத்துவத்தில் சிறந்த அறிவாளர்கள் இங்கே இருக்கிறார்கள். இருந்தாலுங்கூட இங்கே தவிர்க்க முடியாத பிணிகளும் உண்டு. நல்ல உற்பத்தியும் உண்டு. இருந்தாலுங் கூடப் பங்கீட்டு முறையும் இருக்கிறது.

இப்படி எதற்கெடுத்தாலும் 'இருந்தாலுங்கூட' என்று சொல்லும் நிலையில் நாடு உள்ளது. இந்த நிலை மாற வேண்டும்" (பா. 1. எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப்பணி, பக்கம் 2) தனி வேண்டுகோள், புகழ்மாலை, கருத்தேற்றம், உறுதிமொழி முதலியவற்றோடு முடிவு நிறை பெறும்

(எ.டு.) "விருப்பமான துறைகளில் ஈடுபட விருக்கும் பட்டம் பெற்ற மாணவர்கள் தங்கள் சமூக சேவையை எங்கிருந்தாலும் செய்ய வேண்டும். (பா. 1. எங்கிருந்தாலும் ஆற்றுக சமூகப் பணி, பக்கம் 2)

3) தன் வெளிப்பாடு : பல பேச்சுகளில் அண்ணா தன்னையே வெளிப்படுத்துகின்றார் (எ.டு.) "என்னிடம் இருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சிபுரம் தான் காரணம்" (பா. அண்ணாவின் தலைமை உரைகள், பக்கம் 10)

4) தன் வரலாறு : பல பேச்சுகளில் அண்ணா தன்னைப் பற்றிக் கூறுகின்றார். "நான் கல்லூரியில் படிக்கும் பொழுது ஒரு பேராசிரியர் வந்ததும் பாடத்துக்குக் குறிப்புகளைக் கொடுப்பார். அதை அப்படியே எழுதி மனப்பாடம் செய்து தேர்வு எழுதுவார்கள். நான் எழுதாமல் உட்கார்ந்திருந்தேன். 'ஆசிரியர் ஏன் எழுதவில்லை?' என்று கேட்டதும், 'நீங்கள் எழுதியதைப் படித்தால் 40 மதிப்பெண் கிடைக்குமென்றால், நானாக எழுதினால் அதைவிட அதிகமாகக் கிடைக்கும்' என்று பதில் சொன்னேன். அதைப் போலவே அந்த ஆண்டு நம்முடைய மாநிலத்திலேயே நான் முதல் மாணவன் என்னும் பரிசைப் பெற்றேன்.

பரிசு பெற்றதும் அந்த ஆசிரியரிடத்திலே போய்ப் 'பார்த்தீர்களா? நானாகப் படித்ததன் விளைவு' என்று கூறினேன். இதை அப்படியே எல்லோரும் கையாள வேண்டும் என்று நான் சொல்லவில்லை."

(பா. அண்ணாவின் தலைமை உரைகள், பக்கம் 48.)

5) கலை மக்களுக்காகவே : கலை கலைக்காகவே என்னும் கருத்தை ஒரு பொழுதும் அண்ணா ஏற்பதில்லை. இதற்கு அவர் நயமாகக் கூறுவது இதுவே. "5 ரூபாய்

நோட்டை அப்படியே வைத்திருந்தால் அது பயன்தராது. சில்லரையாக மாற்றிச் செலவு செய்தால்தான் பயன் கிடைக்கும். அது போலக் கலை பல பயன்களை மக்கள் வாழ்வில் ஏற்படுத்த வேண்டும். கலை கலைக்காகவே என்பது மெய்யறிவுக் கருத்து.''

6) மரபும் மதிப்பும் : அண்ணா மரபைப் பெரிதும் போற்றுபவர். அவர்தம் பண்பு மதிப்பு மிக உயர்ந்தது. கற்றறிவாளர்கள், சான்றோர்கள் ஆகியோரை அவர் மிக உயர்வாகப் போற்றுபவர். திருக்குறள், விவிலியம், திருக்குரான் முதலிய மறைகளை இவர் பெரிதும் மதிப்பவர். மரபும் மதிப்பும் இவருக்கு இரு கண்கள் போன்றவை.

7) தொலை நோக்கு : அண்ணா நெடிய தொலை நோக்கு படைத்தவர். மையத்திலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி (காங்கிரஸ் ஆட்சி) இருந்தவரை மைய மாநில உறவுகள் குறித்த பேச்சுக்கே இடமில்லை. இப்பொழுது பல மாநிலங்களில் எதிர்க் கட்சிப் பொறுப்பில் இருப்பதால் இந்த உறவுகள் மறுபரிசீலனைச் செய்யப்படவேண்டும் என்பது அண்ணாவின் அழுத்தமான கருத்தாகும். கலந்துரையாடல் மூலமே சிக்கல்களுக்குத் தீர்வுகள் காணவேண்டும். அதிக அளவு வன்முறையைப் பயன்படுத்தினால் பலன் இராது.

(எ.டு.) காஷ்மீர்ப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை.

8) மனித நேயம் : இது மக்கள் மீதுள்ள தணியா அன்பு. அண்ணா பேச்சுகளின் மணிமுடி இயல்பு இதுவே. அண்ணா மக்களைப் பெரிதும் விரும்பினார். மக்கள் இல்லையேல் தானில்லை, அரசு இல்லை, கட்சி இல்லை என அண்ணா உறுதியாக நம்பினார்.

‘‘எங்களை நம்பிய மக்களுக்கு நன்மை ஒன்றும் செய்ய முடியவில்லை என்றால், இந்தப் பதவியை உதறித் தள்ளிவிட நாங்கள் தயங்கமாட்டோம்’’ என்று கூறியவர் அண்ணா.

தம் சாவிலும் அண்ணா சரித்திரம் படைத்தவர். ‘‘ஜன்னல்கள் ஏன் மூடி இருக்கின்றன? வெளியே என்ன இரைச்சல்? நான் அங்குப் போக விரும்புகிறேன்.’’

தம் இன்னுயிரை நீக்குமுன் இதுவே அண்ணா கூறிய கடைசிச் சொற்கள். தான் சாகும் பொழுதும் தன்னை அரியணை ஏற்றிய மக்களை அண்ணா மறக்கவில்லை.

தாயுள்ளம் போல் அவ்வளவு பெரியது அண்ணாவின் மனித நேயம். அண்ணாவைப் போல் மக்களை விரும்பிய தலைவர்கள் உலகில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே இருக்க இயலும்.

இவ்வாறு மெய்சிலிர்க்கவைக்கும் பல அரிய பண்புகளைப் பெற்றவை அண்ணாவின் பேச்சுகள்.

# 5. நடை

பார் புகழும் பேச்சுக்கலையில் முடிசூடா மன்னராக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா. தம் நாவாலேயே தம் அவையை ஆட்டிப் படைத்தவர். தம் நாவசைந்தால் நாடசையும் என்னும் நிலையை உருவாக்கியவர். அவர்தம் பேச்சுகள் பல நயங்களையும் நலங்களையும் நுணுக்கங் களையும் நுட்பங்களையுங் கொண்டவை.

பொதுவாக, நடை என்பது ஆளுமையின் வெளிப்பாடே. அண்ணாவின் ஆன்ற ஆளுமை அவர்தம் பேச்சு நடையில் பட்டை தீட்டிய வைரம் போல் பளிச்சிடுகிறது. அவர் தம் சீரிய நடையில் கையாளும் உத்திகள் பின்வருமாறு.

1) உவமை : கருத்துத் தெளிவிற்காகப் பயன்படுத்தப் படுவது.

(எ.டு.) "இரு இணைப்பு மொழிகளுக்குப் பரிந்து பேசுவது என்பது, சுவரில் பூனை செல்லப் பெரிய துளை இருக்கும் பொழுது, அதன் குட்டி செல்லச் சிறிய துளையிடுவது போன்றுள்ளது. பூனைக்குப் பொருந்துவது குட்டிக்கும் பொருந்தும்".

(அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 39–40.)

2) உருவகம் : உவமையின் பணியை இது செய்வது. கவனத்தை ஈர்க்கப் பயன்படுவது. (எ.டு.) "தமிழ் உமது முரசுமாகட்டும். பண்பாடு உமது கவசமாகட்டும்"

(அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 21.)

3) மேற்கோள் : நூல்களிலிருந்தும் அறிஞர் பெருமக்களிடமிருந்தும் மேற்கோள் காட்டுவது

அண்ணாவின் நிலையான இயல்பு. தம் சான்றுக்கு வலிவு சேர்க்க, இதைப் பயன்படுத்துகின்றார்.

**நூல் : ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

**யாதும் ஊரே யாவரும் கேளிர்.**

அறிஞர் : ''வாய்ப்பு என்னும் மக்களாட்சியிலிருந்து எழும் அருஞ்செயல் என்னும் முடியாட்சியினை நாம் கனவு காணவேண்டும்'' (அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 30.)

**4) வஞ்சப் புகழ்ச்சி :** இது தவிர, எள்ளி நகையாடுவதும் குத்தலாகப் பேசுதலும் பயன்படுத்தப்படுகின்றன. தன் வாதத்தை நிலை நாட்டவும் எதிரியின் வாதத்தைத் தவிடுபொடி ஆக்கவும் இது பயன்படுகிறது.

(எ.டு.) ''கிராமியப் பொருளாதாரத்தோடு நாம் அமைதி யடையவில்லை. டிராம்பேக்களையும் எண்ணூர்களையும் விரும்புகிறோம். அவை அயல்நாட்டவை என்பதை நாம் அறிந்தோம் இல்லை. மொழிபற்றிய விவகாரத்தால் மட்டும் அளவுக்கு மீறிய தேசியவாதிகளாக நாம் நம்மைக் காட்டிக் கொள்கிறோம்.

(அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 40.)

**5) கற்பனைக் காட்சி :** அவையோர் கவனத்தை ஈர்க்க, இது பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

(எ.டு.) ''மனக் கண்ணால் காணுகின்றேன். முதுபெரும் புலவர்கள் அவை நோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும் மூதறிஞர், 'காணீர் தமிழ் நெறியை – தரணியோர் மெச்சிட போற்றிடத்தக்க நன்நெறியை ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரடியை' என்றுரைத்த வண்ணம் திருவள்ளுவர் வந்திடும் காட்சியினை.'' (அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 4.)

6) இரக்கச் சுவை : அவையோர் நாட்டத்தை ஒரு நிலைப் படுத்துவது.

(எ.டு.) "ஆட்சி இழந்தபின் பாரியின் பெண்டிர் இருவர் மலையொன்றில் வாழ்ந்தனர். ஔவையார் அவர்களைக் காணச்சென்ற போது, அவருக்குக் கொடுக்க அவர்களிடம் புதுச் சேலை இல்லை. தாங்கள் அணிந்த நீலச் சிற்றாடையை ஔவையாருக்கு வழங்கினர். நீங்கள் அளித்துள்ள நன்கொடை அந்த நீலச் சிற்றாடைக்கு ஒப்பானதாகும்." (அண்ணாவின் தலைமை உரைகள், பக் 54.)

7) அடுக்குமொழி : அடுக்குமொழி அண்ணா என்று கூறுவது வழக்காகும். இது நடை நுட்பத்திற்காகவும் பொலிவிற்காகவும் பயன்படுத்தப்படுவது.

(எ.டு.) "நம் கட்சி வேலை செய்ய வேண்டிய இடம் திமுக தலைமை நிலையங்களான அறிவகம், அன்பகம் ஆகும். சர்க்கார் அலுவலகம் அறிவகமுமல்ல, அன்பகமும் அல்ல. இது அறிவு அகமாகவும் அன்பு அகமாகவும் இருக்கலாம்." அண்ணாவின் தலைமை உரைகள், பக் 10.)

8) கவின் கதை: இயைபுப் படுத்திக் கருத்தைப் புரிய வைக்கவும் ஆற்றொழுக்கை உண்டாக்கவும் பயன்படுவது. பொது மக்களிடம் பேசும் பொழுதும் இதை அண்ணா அதிகம் பயன்படுத்துவார்.

(எ.டு.) "ஒரு சமயம் ஒருவன் பிரான்சு நாட்டுக்குக் கத்திச் சண்டை கற்றுக் கொள்ளச் சென்றான். அவனுக்குப் பயிற்சியளித்தவன் சொன்னான். 'கத்தியை நீ இறுகப் பிடித்தால் கத்தி வீச்சு இலாவகத்தை நீ அடைய முடியாது.' அதே சமயம் கத்திக் கட்டுப்பாடு இல்லை என்றாலும் கத்தி பறவைபோல் பறந்துவிடும்."

கத்தியைக் கையாள்வதும் கத்திக் கட்டுப்பாடும் கைகோத்துச் செல்வதால், கையாளுதலே கட்டுப்பாட்டை

விடச் சிறந்தது. அதாவது, திட்டமிடுவதைவிடத் திட்டமிட்டதை நிறைவேற்றுவதே மிக இன்றியமையாதது என்பதை அண்ணா அவர்கள் தம் சட்டமன்ற உரை ஒன்றில் கூறுகின்றார்கள்.

9) சொல்வளம் : கன்னிமராவைக் கரைத்துக் குடித்தவர் அண்ணா என்று சொல்வார்கள். அவ்வளவு ஆழமாகப் படித்தவர் அவர். அவர் சொல்வளம் தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்றது. அதனால், அது அவர் தம் நடைக்கு அழகு சேர்க்கிறது. அவர்தம் ஆழமான படிப்பே சொல்வளத்தைப் பெருக்கியது. கடைசி வரை படித்துக் கொண்டிருந்தவர். அமெரிக்காவில் தம் அறுவை சிகிச்சைக்கு முன்கூடப் படித்துக் கொண்டு தான் இருந்தார்.

10) சொல்வன்மை : இது அண்ணா நடையின் மணி முடி. பேச்சுக் கலையில் நேர்த்தியான முறையில் சொற்களைக் கையாளும் முறை இது. பிறவிப் பேச்சாளரான அண்ணாவுக்கு இது கைவந்த கலை. இதன் படிநிலை களாவது:

1. அண்ணா சொற்களை வேட்ப மொழிகின்றார்.

2. அண்ணா சொற்களைத் திறனறிந்து சொல்கின்றார்.

3. அண்ணா வெல்லும் சொற்களை வீசி எறிகின்றார்.

4. அண்ணா அவையை ஆராயும் தம் அறிவாண்மையால் அஞ்சாமல் சொல்கின்றார். அவ்வளவு பேச்சாற்றல் வாய்ந்தது அவர்தம் சொல்வன்மை. வள்ளுவர் சொல் வன்மைக்கு ஓர் இலக்கணமும் இலக்கியமும் ஆகும் அது.

(எ.டு.) "பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர். பல்கலையில் ஈன்றெடுத்த நன்மணிகள் ஆகின்றீர் ஆம்! ஆயின், இது முடிவா தொடக்கமா? இஃதே கேள்வி."

(அண்ணாவின் பட்டமளிப்பு விழா உரைகள், பக் 6.)

11) நகைச்சுவையும் நயமொழியும் : இவ்விரண்டும் இணைந்தே செல்பவை. இயல்பானவை, அறிவுக் கூர்மையானவை, வகையில் வேறுபட்டவை.

ஒரு வீட்டில் துக்க நிகழ்ச்சி. பெண்கள் அழுது கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் 'பந்தலிலே பாவக்கா, பந்தலிலே பாவக்கா' என்று கூற, அதைப் பார்த்த வீட்டுக்குரிய பெண் மறுமொழியாக, 'அது விதைக்கல்ல வச்சிருக்கு, விதைக்கல்ல வச்சிருக்கு' என்று கூறுவதாகத் தம் பொது உரை ஒன்றில் அண்ணா அவர்கள் கூறுகின்றார்.

''மக்களாட்சி நாட்டில் ஒரு கட்சித் தலைவரை இன்னொரு கட்சித் தலைவர் பாராட்டுவார். அவருடைய படத்தைத் திறந்து வைப்பார். ஆனால், சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவரின் சமாதியை இன்னொரு தலைவர் கட்டி முடிப்பார்''.

(அண்ணாவின் தலைமை உரைகள், பக் 50.)

இடத்திற்குத் தகுந்தவாறு நகைச்சுவைவ்யை அண்ணா பயன்படுத்தும் பாங்கு போற்றுதற்குரியது.

12) நடைவேறுபாடு : அண்ணாவின் பேச்சுகள் எல்லாம் ஒரே நடையைக் கொண்டவை அல்ல. அது பேச்சு வகைக்குத் தகுந்தவாறு மாறுபடுவது.

சட்டமன்ற, நாடாளுமன்றப் பேச்சுகளில் கருத்து வீச்சை மேம்படுத்துவது வாதநடை. பட்டமளிப்பு விழா உரைகளில் உயரிய கருத்துகளைத் தெரிவிப்பது விழுமிய நடை. பாராட்டுரைகளில் சில இனிய இயல்புகளை எடுத்தியம்பு வதால் அது விளக்கநடை.

வானொலி உரைகளில் உள நிகழ்ச்சியை உண்டாக்கு வதால், அது உணர்வுப்பிழம்பு நடை.

துவக்க உரைகளிலும் சில செய்திகளைப் படம் பிடிப்பதால் இது படப்பிடிப்பு நடை.

பொது உரைகளில் பலவகைப்பட்ட கருத்துகளைத் தெரிவிப்பதால் அது பல்வண்ண நடை..

பலவகைக் கருத்துகளைப் பல கோணங்களில் விளக்குவதால் அண்ணாவின் நடையைக் கருத்துவள நடை அல்லது பெருமித நடை எனலாம்.

சுருங்கக் கூறின், பழுத்த அறிவு, கூரிய மதிநுட்பம், அகன்ற காட்சியறிவு ஆகியவை அவர்தம் நடையினை அணி செய்கின்றன. அதில் அவர்தம் ஆளுமையும் முனைப்பாக ஆட்சி செய்கிறது. கருத்து முதன்மையும் முழுமையும் கருத்து வெளிப்பாட்டு விழுப்பமும் அவர்தம் நடையின் தலை சிறந்த பண்புகள் எனலாம். சுருக்கம், தெளிவு, இனிமை, ஓசைநயம், அறிவாழம் முதலியவை அவர்தம் பேச்சு நடையின் ஏனைய பண்புகள்.

அவர்தம் நடை ஒரு தனிவீறும் தனியாண்மையும் கொண்டது. அஃதே அண்ணாவின் நடை. பலரும் பின்பற்றுவதற்கு மாதிரியாக அமைந்த நடை.

13) மொழிச் செம்மை : அண்ணாவின் நடையில் தூய தமிழ் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்றும் ஒரு வினா எழலாம். பேச்சுத்தமிழில் மொழித் தூய்மைக்கு இடமில்லை. கருத்துத் தெளிவும் ஓட்டமுமே கருதப்பட வேண்டியவை. அவ்வகையில் பயன்பாடு கருதி வடமொழி ஆங்கிலம் முதலிய பிறசொற்களை மிகக் குறைந்த அளவே பயன்படுத்துகிறார். அதிக அளவுக்குத் தூய தமிழையே கையாளுகின்றார். அவர் தம் நடையில் தமிழ் முனைப்பாகவே உள்ளது. அவர் நல்ல தமிழையே பயன்படுத்துகின்றார்.

# 6. மேடைப் பேச்சுமொழிகளும் கருத்துகளும்

இவ்வியலில் அண்ணாவின் அருமொழிகளும் ஆன்ற கருத்துகளும் அவர்தம் பேச்சுகளில் பொதிந்துள்ளதைக் காண்போம்.

## அருமொழிகள்

ஒரு கருத்தைச் செறிவாகவும் சுருக்கமாகவும் நகைச்சுவையாகவும் உரைப்பதற்கு அருமொழி (aphorism) என்று பெயர். இது பழமொழி போன்றது இம்மொழியைக் கூறுவதில் அண்ணா வல்லவர். ஒரு சிலவற்றை இங்கு அகரவரிசைப் படுத்திக் காண்போம்.

அறிவிப்பு சாதனையல்ல

இது பாமரனின் காலம்

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?
(மனோன்மணீயத்தைத் தழுவியது)

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்

ஏழையின் சிரிப்பில் இறைவன்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

கத்தியைத் தீட்டாதே உன் புத்தியைத் தீட்டு

சட்டம் ஓர் இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு.

சர்வாதிகாரம் ஒரு காட்டுத் தீ

நல்லவன் வாழ்வான்

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு

மறப்போம் மன்னிப்போம் (சர்ச்சில் மொழியைத் தழுவியது)

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
மாறாத சமுதாயம் மறைந்து விடும்
முணுமுணுப்பு இன்று இடிமுழக்குமாகிவிட்டது.
வீட்டிற்கோர் புத்தகசாலை நாட்டிற்கு நலந்தரும்.

## ஆன்ற கருத்துகள்

ஒரு சில பொறுக்கு மணிகள் இங்கு அகர வரிசையில் தரப்படுகின்றன.

அரசியலில் கருத்து வேறுபாடு இருக்கலாம்;
ஆனால் இது கசப்புணர்ச்சியை வளர்க்கக்கூடாது.

ஒரு நாட்டின் நிலையான பெருமைக்கும் செல்வத்திற்கும் ஊன்றுகோலாக இருப்பது கல்வியே.

ஒருவரை நாம் மதிப்பிடும் நேரத்தில், மாறான கருத்து கொண்டவர்களும் அவர்களை மதிக்கிறார்கள் என்பதை அறியும் போது ஏற்படும் இனிமையை விட, வேறு ஓர் இனிமை இருக்க முடியாது.

கருத்தாழ மிக்க நூல்கள் வெளிவரப் பொது மக்கள் ஆதரவு தர வேண்டும்.

கலந்துரையாடியே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

கலை என்பது மக்களைக் கட்டியாள்வது; அரசியல் என்பது மக்களைக் கட்டியாண்டு திருத்துவது.

சமுதாயச் சீர்திருத்தம் வேறு; சமூக சேவை வேறு.
சர்க்கார் வேறு; கட்சி வேறு.

தமிழக அரசினுடைய எல்லா வளமுமே இன்று காவிரி ஆற்றில் இருக்கிறது.

தமிழ்ப்பண்பாடு எல்லா மனிதர்களையும் சகோதரர் களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்

தொடக்கம் தூய்மையாக இருந்தால்தான் தொகுப்பும் முடிப்பும் சரியாக அமையும்.

பகுத்தறிவு என்பது அடிப்படை உண்மைகளையும் வெளிப்படை உண்மைகளையும் மறுப்பதன்று. ஆனால், எண்ணம், செயல் ஆகியவற்றில் உள்ள ஐயுறவு நிலைகளை அழிப்பதாகும் அது.

பண்பாடுடைய ஒருவரைப் பாராட்டுவது தமிழ்ப் பண்பாடு ஆகும்.

நம் ஆவலின் அளவு சாதனைகளின் அளவை மீறியதாகும்.

நாட்டிலுள்ள நிதிநிலைமை, மூலப் பொருள், தொழில் நுட்ப அறிவு முதலியன ஒருங்கிணைந்து செயற்படும் ஒருமைப்பாடே உண்மையானதாக இருக்க முடியும்.

நல்லவர்கள் குடிப்பதில்லை; குடிப்பவர்கள் நல்லவர்கள் அல்லர்.

மக்களாட்சி என்பது ஓர் அரசு வகைமட்டுமன்று. அது புதிய வாழ்க்கைக்கு ஓர் அழைப்பு; நலங்களையும் நாட்டங்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்து கொள்ளும் கலையில் ஓர் ஆய்வு; பொதுத் தொண்டிற்காக ஒவ்வொரு தனியாளிடமும் உள்ள இயல்பான ஆற்றலை இயக்குவதற்கும் ஒருமைப் படுத்துவதற்குமான ஒரு முயற்சி.

மரபு என்பது இப்போது மறதியாகிவிட்டது.

மாநில அரசாங்கங்கள் மதிப்பில்லாமல் போனதற்கு மாநில அரசுகள்தான் பொறுப் பேற்க வேண்டும்.

மொழிபெயர்க்கும் பொழுது கருத்துகளைத் திரட்டித் தரவேண்டும்.

ஜனநாயகத்திற்கு மக்களால் எந்தவித ஆபத்துமில்லை; (ஆபத்து அரசியல்வாதிகளாலேயே).

## 7. தரணிபோற்றும் தண்டல உரை

"காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த நீங்கள் எல்லாம் இந்தச் சிற்றூரில் இவ்வளவு பெருந்திரளாகக் கூடி இருப்பது, நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் காமராசர் அவர்கள் இங்கே நம்மிடத்திலே நம்முடைய நிலைமைகளை நேரடியாகப் பார்ப்பதற்கும், அவற்றிற்கான நல்ல அறிவுரைகளைக் கிராமத்து மக்களுக்குத் தருவதற்கும் வந்திருக்கின்ற இந்த விழாவில் நீங்கள் எல்லாம் கலந்து கொள்ள வந்திருக்கிறீர்கள்.

இந்தச் சிற்றூருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்ட நேரத்தில் மிக மகிழ்ச்சியோடு, பெரிய பதவியிலே இருப்பவர்கள் வழக்கமாகக் கையாளும் முறையைக் கையாளாமல், தாராளமாக வருகிறேன் என்று என்னிடத்திலே ஒப்பம் அளித்தார்கள். அவர்களை நான் வரும்படியாகக் கேட்டுவிட்ட பிறகு, அதிலே இருக்கும் பெரிய பொறுப்பு எனக்கு உண்மையிலேயே சிக்கலாக இருந்தது.

வழிகண்டு பிடிக்க முடியாத இந்தக் கிராமத்திற்கு (தண்டலம்) நம்முடைய முதலமைச்சர் அவர்களை வரவழைத்தது தொல்லை தருவதாக ஆகுமோ என்று தான் கொஞ்சம் ஆயாசப்பட்டேன். ஆனால், நாட்டுக்கே வழிகாட்ட வேண்டும் என்று அவரை இன்றைய தினம் நாம் நம்பி இருக்கின்ற போது, வழி இல்லாவிட்டாலும் இத்தகைய கிராமங்களுக்கு வருவதிலேயே அவர்கள் மெத்த மகிழ்ச்சி அடைவார்கள் என்று எனக்கு நானே சமாதானம் தேடிக் கொண்டேன்.

இன்றைய தினம் நம்முடைய நாட்டில் கிராமப் புறங்கள் எந்த நிலையில் சீர்குலைந்துள்ளன என்பது நம்முடைய முதலமைச்சர் அவர்கட்கு நன்றாகத் தெரியும். நான் சார்ந்து இருக்கின்ற இந்தக் காஞ்சிபுரம் தொகுதியில் ஏறக்குறைய 130 கிராமங்கள் இருக்கின்றன.

இந்தத் தொகுதியிலே வாழுகின்ற மக்கள் மிக்க அடக்க ஒடுக்க உணர்ச்சியோடும் நாட்டினுடைய நன்மையை மனத்திலே கருதியும் நீண்ட காலமாகப் பலகுறைகளைத் தாங்கிக் கொண்டு வந்துள்ளார்கள். அப்படிப்பட்ட கிராமத்து மக்கள் நாட்டு முதுகெலும்பு என்பதைத் தெரிந்து கொண்டிருக்கின்ற ஒரு நல்ல தலைவர் இன்றைய தினம் நம்முடைய மத்தியிலே இருக்கிறார்கள்.

அவரிடத்திலே நம்முடைய கிராமத் தோழர்கள் தங்களுக்கு ஊற்ற குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்று மெத்த ஆவலோடு இருக்கின்றார்கள்.

நம்முடைய முதலமைச்சர் கிராமத்து முன்னேற்றத்தில் நல்ல அக்கறை காட்டும் தலைவர் என்பதால்தான், நானும் அவரும் வேறுவேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றாலும், இந்தப் பிரச்சனைகள் கட்சிக்கு அப்பாற்பட்டன என்னும் ஒரு பெருந்தன்மையிலேயே அவர்கள் இன்றையதினம் வர இசைந்துள்ளார்கள்.

ஒரு பெரிய தலைவருக்கு இருக்கிற சிறப்பியல்பு கட்சியை விட நாட்டு மக்களுடைய தொண்டுதான் முக்கியம் என்பதும், கட்சியே நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றுவதற்கு இருக்கிற கருவிதான் என்பதும் என்றைய தினம் அவர்கள் உள்ளத்திலே ஆழப்பதிகின்றதோ அன்றைய தினந்தான் அவர்கள் தலைவர் வரிசையிலே புகுகின்றார்கள். நம்முடைய

மாநில முதலமைச்சர் அவர்கள் இத்தகைய பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது இவர்களை நீண்ட காலமாக எதிர்த்துக் கொண்டு வருகிற நானும், இன்னும் எதிர்க்கப் போகின்ற நானும் நன்றாக உணர்ந்திருக் கின்றேன்.

முதலமைச்சர் அவர்களே! எங்கள் தொகுதியிலே உள்ள கிராமத்தை நீங்கள் காணுகின்றீர்கள். கிராமத்து மக்களையும் நீங்கள் பார்க்கின்றீர்கள். நான் பெரிதும் கிராமத்து மக்களை மட்டுமே உங்கள் கண்முன்னாலே காட்ட வேண்டும் என்று எண்ணினேன். ஆனால், ஆர்வம் காரணமாக நகரத்து வாலிபர்களும் ஏராளமாக இங்கே கூடி இருக்கிறார்கள். அவர்கள் கிராமம் அல்ல என்பதைத் தாங்கள் தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாக, மிகவும் மலர்ந்த முகத்தோடு இந்தக் கூட்டத்திலே இருப்பவர்கள் நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர்கள். என்ன நடக்குமோ என்னுந் திகைப்போடு இருப்பவர்களை நீங்கள் பார்த்தால் அவர்கள் எல்லாம் கிராமத்து மக்கள்.

வெள்ளை வேட்டியோடு இருப்பவர்கள் எல்லாம் நகரத்து மக்கள். இன்றைய தினம் மட்டுமாவது வெள்ளை வேட்டி கட்டிக் கொள்ளலாம் என்னும் வேதனையோடு இருப்பவர்கள் கிராமத்து மக்கள். இவர்கள் வாழுகின்ற ஊர் நாட்டினுடைய முதுகெலும்பு என்பது தங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று, அவர்கள் தங்களிடத்திலே அபாரமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

இந்தத் தொகுதியிலே நான் ஓட்டுக் கேட்டு வந்த நேரத்தில் கிராம மக்களிடையே மூன்று மனப்பான்மை களைக் கண்டேன்.

ஒன்று, தேர்தலிலே கிராமத்து மக்களுக்கு இன்றைய தினம் வரவரச் சலிப்பு அதிகமாகி இருக்கிறது. யார் பதவிக்கு வந்தாலும் தங்களை யாரும் கைகொடுத்துத் தூக்குவதில்லை. எவர் வந்தாலும் இதைச் செய்வோம் அதைச் செய்வோம் என மளமளவென்று வரமளிக்கிறார்களே தவிர, நம்முடைய நிலைமைகளை மேன்மையுறச் செய்கின்றவர்கள் யாரு மில்லை என்னும் சலிப்புணர்ச்சியினர், "எங்களிடத்திலே எதற்காக வாக்கு கொடுத்தீர்கள்? ஏன் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொல்லை தருகின்றீர்கள்?" என்று கேட்குமளவுக்கு உள்ளார்கள் என்பதைக் கிராமப் புறங்களில் நான் கண்டேன்.

இரண்டாவதாக, கிராமங்களில் உள்ள ஒரு மனப்பான்மை நாட்டை ஆளுகின்ற சர்க்கார் எந்தக் கட்சியினாலே நடத்தப்பட்டாலும் அது பெரும் பகுதி நகரத்திற்குத்தான் பயன்படுகிறதே தவிர நாட்டுப் புறங்களுக்குப் பயன்படவில்லை என்னும் ஓர் எண்ணமும் இருக்கிறது.

மூன்றாவதாக, அவர்களிடையே இருக்கிற ஓர் எண்ணம் எங்களுக்காகச் செய்யப்பட வேண்டிய ஒரு செயலை, எங்கோ இருப்பவர்கள் தீர்மானிப்பதைவிட, நாங்களே தீர்மானித்து எங்களிடத்திலே அதற்கான வழிவகைகளைத் தந்து வசதிகளைச் செய்து கொடுத்தால், நாங்கள் அதைவிடத் திறமையாகச் செய்து முடிப்போம் என்று சொல்லத்தக்க மனப்பான்மை இருப்பதை நான் கண்டேன். இந்த மூன்று மனப்பான்மைகளும் மக்களாட்சிக்குத் தேவையான மனப்பான்மைகளே. இவை எல்லாம் அதிருப்தியிலே விளைந்தவை என்றுமட்டும் தள்ளி விடுவதற்கில்லை.

இம்முறைகளைக் களைந்தெறிய மூன்று முறைகள் உள்ளன.

ஒன்று இவ்வளவு குறை இருக்கிறது என்று மக்களிடையே அதிர்ச்சியை மட்டும் கிளப்புவது.

இவ்வளவு குறை இருக்கிறது. ஆகவே, கிளர்ச்சி செய்யுங்கள் என்று தூண்டுவது.

மூன்று, இவ்வளவு குறை இருக்கிறது. வந்து காணுங்கள் என்று ஆட்சியாளர்களைக் கொண்டு வருவது. நான் மூன்றாவது வழியைப் பின்பற்றி இருக்கிறேன். இந்த வழிபயன் அளிக்கும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்.

எந்தக்கட்சியும் வறுமை நீங்க வேண்டும, அறியாமையைப் போக்க வேண்டும், கிராமப்புறத்து நிலையை உயர்த்த வேண்டும் என்னும் அடிப்படைக் கொள்கையில் ஒரு மாதிரியான மாறுபாடும் வைத்துக் கொண்டில்லை என்று கூறிக் கிராமத்து மக்கள் சார்பிலும் தொகுதி மக்கள் சார்பிலும் என் சொந்தச் சார்பிலும் முதலமைச்சரை வருக வருக என வரவேற்கிறேன்.

[அண்ணா தொகுதியைச் சார்ந்த தண்டலம் கிராமத்தில் 11–8–57 அன்று ஆற்றிய வரவேற்புரை. தமிழக ஜனநாயக வரலாற்றில் இது ஒரு பொன்னேடு. காமராசர் மீது அண்ணா கொண்டிருந்த மட்டற்ற மரியாதையைக் காட்டுவது இது.]

# 8. ஆய்வாளர்கள்

இவ்வியலில் அண்ணா கூறும் செய்தி பற்றியும் அண்ணாவின் ஆய்வாளர்கள் பற்றியும் காண்போம்.

அண்ணா தம் அவையோருக்குக் கூறும் செய்தி, அவர்தம் பேச்சுகளின் நோக்கத்தோடு தொடர்புடையது. வீழ்ச்சியுற்ற தமிழ்ச் சமுதாயம் எழுச்சிபெற வேண்டும் என்பதே அண்ணாவின் பேரவா. அதாவது, நம் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் உயரிய கருத்துகளை நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே அச்செய்தி. இத்தமிழ்ச் செய்தியை அண்ணா தம் செய்தியாக அவையோருக்கு அறிவிக்கின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில் அவர் இதனைத் தெளிவாகக் கூறுகின்றார்.

''இன்னுஞ்சில ஆண்டுகள் அவர் (சர். ஆர். கே. சண்முகம்) வாழ்ந்திருப்பாரேயானால், தமிழ் இலக்கியங்களின் செய்தியினைச் சுமந்த வண்ணம் உலகின் பல நாடுகளுக்கும் சென்றிருப்பார். கடந்த பெருங்காலத்தைப் பற்றிப் பேசப்பட்ட செய்திதான் என்ன?

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். திருமந்திரம் (2066)

யாதும் ஊரே யாவரும் கேளிர். புறம் (192)

வினையே ஆடவருக்கு உயிரே. குறுந்தொகை (135)

நல்லது செய்தல் ஆற்றிராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின். புறம் (195)

எவ்வழி நல்லவர் ஆடவர்

*அவ்வழி நல்லை, வாழிய நலனே. புறம் (487)*

*செல்வத்துப் பயனே ஈதல். புறம் (187)*

*தீதும் நன்றும் பிறர்தர வாரா. புறம் (112)*

*பகுத்துண்டுப் பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை – குறள் (322)*

*இப்பாடல்களில் அமைந்துள்ள கருத்துகள் இப்பொழுது உலகின்முன் இக்காலத்து மலர்கள் என வைக்கப்படுகின்றன."*

## ஆய்வாளர்கள்

அண்ணாவின் அறிவாண்மையை இதுவரை ஐந்து பேராசிரியர்கள் தம் ஆராய்ச்சிக்குப் பொருளாக எடுத்துக் கொண்டு நன்கு ஆராய்ந்து நல்ல முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளார்; முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர்.

*1) அண்ணா நாடகங்கள் ஓர் ஆராய்ச்சி. முனைவர் ஜனார்த்தனன். இதுவே முதல் முனைவர் பட்ட ஆராய்ச்சி நூல்.*

*2) அண்ணாவின் கதை இலக்கியம். முனைவர் இரா. சேது. அண்ணா புதினங்கள் சிறு கதைகள் பற்றிய மதிப்பீடு.*

*3) அண்ணாயியம் – முனைவர் கு. விவேகாநந்தன். அண்.ணாவின் மடல்கள் பற்றிய முழு ஆராய்ச்சி. இம்மூன்றும் தமிழில் எழுதப்பட்டவை.*

4) C.N. Annadurai - A Study in Politics and Administration Dr. L. Thiyagarajan (1983). இது சிறந்த ஆய்வேடு.

5) Anna and Burk - A Study in Contrast Dr. S. Gopalswamy 1991. இது இறுதியாக வந்த ஒப்பீட்டு ஆய்வேடு.

# 9. வெளியீடுகள்

அண்ணாவின் பேச்சுகள் எழுத்துகள் குறித்த வெளியீடுகள் பற்றி இறுதியாக இவ்வியலில் காண்போம். தம் பேராற்றலை வெளிப்படுத்த அண்ணா பேசியது போல் எழுதியது போல் இந்த உலகில் ஒரு சிலரே செய்திருக்க இயலும். ஒருவர் ஒருதுறையில்தான் வல்லவராக இருப்பார். ஆனால், அண்ணாவோ பல்துறை வித்தகராக விளங்கினார். இவ்வுண்மையை அவர்தம் பேச்சுகளும் எழுத்துகளும் உலகிற்கு என்றும் பறைசாற்றும்.

## வெளியீட்டாளர்கள்

அண்ணாவின் பேச்சுகளையும் எழுத்துகளையும் முதன்முதலில் வெளியிட்டது திருச்சி திராவிடப் பண்ணையே. இது வரலாற்றுச் சிறப்பிற்குரியது.

அடுத்துச் சென்னை பாரிநிலையம் அண்ணாவின் குறிப்பிட்ட பேச்சுக்களையும் எழுத்துகளையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாக அண்ணாவின் மடல்களை முழுவதையும் பல தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. மற்றும் புதினங்களையும் சிறுகதைகளையும் வெளியிட்டுள்ளது.

சென்னை பரிமளம் பதிப்பகம் அண்ணாவின் சிறுகதைகளை மட்டும் வெளியிட்டுள்ளது.

தஞ்சை அண்ணா வெளியீட்டில்லம். (தற்பொழுது எஃப் 2, ஸ்ரீவாரி அபார்ட்மெண்ட்ஸ், 42, கிருஷ்ணாபுரம் தெரு, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை-94.)

அண்ணா அவர்களின் பேச்சுகளையும் எழுத்துகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆராய்ச்சிப் பதிப்புகளாக வெளியிட்டு வருகின்றது.

சென்னையிலுள்ள பாரதி புத்தகநிலையமும் பூம்புகார் பிரசுரமும் அண்ணாவின் எழுத்துகளை வெளியிட்டு வருகின்றன.

## வெளியீடுகள் - பேச்சுகள்

தமிழ் : *150*க்கு மேல் வெளி வந்துள்ளன. இன்னும் வெளி வர வேண்டியவை *200*க்கு மேல் இருக்கலாம். இவற்றைத் திரட்டி வெளியிட அ. கி. மூர்த்தி அரிதின் முயன்று கொண்டுள்ளார்.

ஆங்கிலம் : *1) 1967 - 69.* இக்காலத்திய தமிழ்ப் பேச்சுகள் *128.* ஆறு தொகுதிகளாக ஆங்கிலத்தில் அ.கி. மூர்த்தித் தொகுத்து தஞ்சை அண்ணா வெளியீட்டகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார்.

*2) 1962–66.* இக்காலத்தில் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய *13* உரைகள். பண்ருட்டியார் அவர்களால் Anna Speaks என்னும் தலைப்பில் ஓரியண்ட் லாங்கமன் பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

இனி வரவேண்டிய பேச்சுகள் 20–க்குள் இருக்கலாம்.

## வெளியீடுகள் - எழுத்துகள்

தமிழ்

1) கடிதங்கள் முடிந்துவிட்டன (பாரி நிலையம்)

2) புதினங்கள் அனைத்தும் வெளிவந்துவிட்டன. சிறுகதைகள் இன்னும் ஒரு சில வெளி வரவேண்டும்.

*3)* நாடகங்கள் : பெருநாடகங்கள் வெளிவந்துவிட்டன சிறுநாடகங்கள் வரவேண்டியவை பல உள.

*4)* கட்டுரைகள் : பல நிலைகளில் வரவேண்டிய நிறைய உள்ளன. தலையங்கங்கள், அணிந்துரை, வாழ்த்துச் செய்தி, இரங்கற் செய்தி முதலியன.

*5)* அண்ணா போற்றிய பெருமக்கள் முதல்தொகுதி மட்டும் தமிழ் நாடு அரசு வெளியீடாக *(1988)* வெளிவந்துள்ளது.

## ஆங்கிலம்

இலக்கிய வரிசையில் இருநிலைகளில் வெளியிடப்பட வேண்டும்.

### 1) மொழியாக்கம்

i) Anna's Plays - One Night

ii) Anna's Short Stories (13)

iii) Anna's Novels - Parvathi B.A

இவை மூன்றும் அ.கி. மூர்த்தி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடுவதற்கு ஆயத்தமாக உள்ளன/ உரிய காலத்தில் வெளியிடப்படும்.

## ஆங்கிலம் மூலம்

அண்ணா அவர்கள் தாம் துவக்கக் காலத்தில் ஓம் லேண்டி (Home Land)லும் பின் ஓம் ரூலி (Home Rule)லும் எழுதியவற்றைப் பின் வருமாறு வெளியிடலாம்

i) Anna's Memorable Editorials 3 vols

ii) Anna's Epistles - 3 vols

iii) Anna's Articles - 3 vols

இவற்றைத் திரட்டி வெளியிட அ. கி. மூர்த்தி அவர்கள் அரிதின் முயன்று கொண்டிருக்கிறார். தலையங்கக் கட்டுரைகளின் முதல் தொகுதித் திரட்டுப்பட்டு வெளியிடு வதற்கு ஆய்த்தமாக உள்ளது.

இதுகாறும் கூறியதற்கேற்ப வெளிவராத பேச்சுகளையும் எழுத்துகளையும் (தமிழ், ஆங்கிலம் இரண்டும்) வெளியிடுவோ மாயின், அண்ணாவின் எழுத்துகள் பேச்சுகள் பற்றிய ஒரு முழுப் படப்பிடிப்பு நமக்குக் கிடைக்கும்.

**மைய அரசு நேருவுக்கும் காந்தியாருக்கும் செய்தது போன்று, சோவியத்து அரசு இலெனினுக்கும் ஸ்டாலினுக்கும் செய்தது போன்று, மராட்டிய அரசு அம்பேத்கருக்குச் செய்தது போன்று அண்ணாவழி அமைந்த அரசுகள் அண்ணாவின் பேச்சுகளையும் எழுத்துகளையும் தொகை வகை செய்து கால வாரியாக வெளியிடாதது கசப்பான வரலாற்றுண்மையாகும்.**

## முடிவுரை

இறுதியாக ஒரு வினாவை எழுப்பி இவ்வுரையை நிறைவு செய்தல் நல்லது. அண்ணா ஒரு சிறந்த பேச்சாளரா? இவ்வினாவிற்கே இடமில்லை.

1947லேயே அவர் ஒரு சிறந்த பேச்சாளர் என்பது முடிவான செய்தி. பல பெரியவர்களால் பேசுந் தெய்வம் எனக் குறிக்கப்பெற்றவர் அண்ணா.

அண்ணா ஒரு பிறவிப் பேச்சாளர். ஒப்புவுமை கூற இயலாத சிறந்த பேச்சாளர். யாவருக்கும் பேசிய ஒரே பேச்சாளர். இக்கருத்தைச் சென்னை மவுண்ட் சாலையில் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்துப் பேசிய சர் இராமசாமி அவர்களும் வழிமொழிந்து உலகின் சிறந்த பேச்சாளர் அண்ணா என்று கூறியுள்ளார்.

அண்ணாவின் சிறப்புகளைக் கூறியும் நேரு பெருமகனார் புகழுரையோடும் இவ்வுரை நிறைவு செய்யப் படுகிறது.

## அண்ணா

சரித்திரம் படைத்த சாமான்யர்
மன்பதை போற்றும் மாமேதை
தனக்கென வாழாத் தனிப் பெருந்தகை
நானிலம் போற்றும் நாவேந்தர்
அடக்கத்தின் ஆன்ற உருவம்
எளிமையின் ஏந்தல்
தென்னாட்டுக் காந்தி
கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்த செம்மல்

என்று பல படக் கூறலாம்.

நாடாளுமன்றத்தில் அண்ணாவின் கன்னிப் பேச்சைக் கேட்ட பின் நேரு பெருமகனார் கூறியதாவது : "இவர்தம் வருகை வரவில் கொள்ளப்பட வேண்டிதாகும்."

தன் தனிப்பெரும் பேச்சாற்றலால் என்றும் மக்கள் உள்ளத்திலும் வாசகர் உள்ளத்திலும் வாழ்பவர் பேரறிஞர் அண்ணா.



நூலாசிரியர்

மணிவாசகர் பதிப்பகம்